எய்ம் பதின்ம மேல்நிலைப் பள்ளி. ஆரணி.-2024.

வகுப்பு: 10 அலகுத் தேர்வு – 3 மதிப்பெண்: 50

B3, B4, G2 & G3 தமிழ்

இயல் 6 ( பன்முகக் கலைஞர் )

**I. பலவுள் தெரிக: -** **8 x 1 = 8**

1. மெய்யியல் உத்தி கொண்ட கம்பராமாயணப் படலம் எது?
   அ) கங்கைப் படலம் ஆ) கங்கை காண் படலம்
   இ) ஆற்றுப் படலம் ஈ) நாட்டுப் படலம்
2. பாலை நில பெரும்பொழுது அல்லாதது எது?
   அ) வேனில் ஆ) பின்பனி இ) முன்பனி ஈ) இளவேனில்
3. தமிழ்நாடு அரசின் சார்பில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்த ஆண்டு ________.
   அ) 2010 ஆ) 2020 இ) 2004 ஈ) 2014
4. 'காகித ஓடம் கடல் அலை மேலே' என்னும் பாடல் இடம்பெறும் திரைப்படம் ___________.
   அ) நெஞ்சுக்கு நீதி ஆ) மலைக்கள்ளன்
   இ) மறக்க முடியுமா? ஈ) ரங்கோன் ராதா
5. சந்தத்துடன் உள்ள பாடலில் _________ அதிகம் இருக்கும்.
   அ) ஈர்ப்பு ஆ) உயிர்ப்பு இ) ஏற்றம் ஈ) உயர்வு
6. "ஓங்கு இரும் பரப்பின்
   வங்க ஈட்டத்து தொண்டியோர்" பாடலும் எண்ணும்
   i) சிலம்பு 107 ii) மணிமேகலை 107
   iii) சிலம்பு 108 iv) மணிமேகலை 108
   அ) i), ii) சரி ஆ) i), iii) சரி இ) i), iv) சரி ஈ) ii), iv) சரி
7. பொருள் என்பது ________.
   அ) வருவாய் ஆ) வருமானம்
   இ) ஒழுக்கமுறை ஈ) நடத்தை முறை
8. யாழ், பண் மாறுபட்டு உள்ள திணை ___________.
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

**II. எவையேனும் ஐந்தனுக்கு விடையளி: - (கட்டாய வினா - 15)** **5 x 2 = 10**

9. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும் - இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
10. கம்பனின் புகழ்மொழிகள் யாவை?
11. ஆசிரியர் பெயர் தருக.
    அ) தக்கையின் மீது நான்கு கண்கள்
    ஆ) நாட்டார் கலைகள்
12. "கலைஞர் பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" – பேராசிரியர் அன்பழகனார்.
    இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.
13. முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வார இதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர் – தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.
14. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?
15. குடிசெயல் வகை மனனக் குறளை எழுதுக.

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க: - (கட்டாய வினா - 20)** **3 x 3 = 9**

16. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

17. ஐவகை நிலங்களின் திணையும் பொழுதும் எழுதுக.

18. பொருள், தமிழாக்கம் தருக.

i) தால் ii) அணிமை

iii) Storyteller iv) Playwright

19. கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது. மலைப்பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன. – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

20. அ) வெய்யோனொளி எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

ஆ) செம்பொ னடிச்சிறு எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடலை எழுதுக.

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடையளி: -** **3 x 5 = 15**

21. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக. அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே!............

22. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

23. "ஒயிலாட்டக் குழுவினர்" – இத்தொடரைக் கொண்டு 10 – வரிகளில் கவினுற எழுதுக.



24. உங்கள் துறையின் அறிவைக் கொண்டு தமிழுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

சான்று : 1. என் துறையில் வல்லுநரானபின், அத்துறையினைப் பற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன்.

25. மொழிபெயர்த்துத் தலைப்பிடுக: -

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage – plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. A part from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanniyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

**V. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விரிவான விடையளிக்க: -** **1 x 8 = 8**

26. அ) கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வு.

(அல்லது)

ஆ) மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து விரிவாக எழுதுக.